பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 1 செவ்வாய் (17—10—72) வெளியூர்: ஐப்பசி 2 (18—10—72) புதன் [இதழ்: 102

ஒலி வேகத்தில் 3,000 மைல் பாயும்

அமெரிக்காவைத் தாக்கிவிட்டுத் திரும்பிவிடக் கூடுமாம்

இரஷ்யா தயாரிக்கும் போர் விமானம் பற்றித் தகவல்

ஒலியைக் காட்டிலும் அதிக வேகத்தில் இரஷ்யாவிலிருந்து நேரடியாகச் சென்று அமெரிக்காவைத் தாக்கிவிட்டுத் திரும்பக்கூடிய போர் விமானங்களைப் பெரும் அளவில் உற்பத்தி

(2-ம் பக்கம் பார்க்க)

வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்ட எம். ஜி. ஆர்.

திட்டமிட்டே செயலாற்றினர் ★ 18,000 கிளைக் கழகச் செயலாளர்களின் விரோதத்திற்கு ஆளாக

முன்கூட்டியே தயாராகிவிட்டார் ★ கழகத்தை எதிர்க்கின்றவர்கள் கடுகளவினராக இருந்தாலும்

மலையளவு விளம்பரம் தர மன எரிச்சல்கொண்ட பத்திரிகைகள் தயாராக இருக்கின்றன

★ அவதூறுகளுக்கு நாம் பதிலளிக்கையில் இம்மியளவும் இடம் தரக்கூடாது

எம். ஜி. ஆர். எண்ணியது நடந்துவிட்டது

[★]

அடிப்படைக் காரணங்களை விரைவில் காலம் நமக்குச் சொல்லும்

[★]

எவ்வளவு ஏமாளியாக இருந்தோம் என்பதை அன்று நாம் உணருவோம்

பொதுக்குழு உறுப்பினர்களிடை கழகத் தலைவர் கலைஞர் உருக்கமிகு உரை

சென்னை, அக். 17—

"எம். ஜி. ஆர். அவர்கள், தம்மை தி. மு. கழகத்திலிருந்து வெளியேற்றியதைப் பற்றி, 'பரவாயில்லை' என்று நினைக்கிறேனென்றால், இந்தக் கழகத்தினை அந்த அளவிற்குத் துச்சமாக மதிக்கிறார் என்ற எண்ணம்தான் நமக்கெல்லாம் ஏற்படும்; ஏனென்றால், அவர் எதிர்பார்த்தது 'இப்படி நடக்கவேண்டும்' என்றுதான்; அவர் எண்ணியது நடந்துவிட்டதாகத்தான் அவர் கருதியிருக்கிறார்; அதற்கு அடிப்படையான காரணங்கள் என்ன என்பதைக் காலம் நிச்சயமாக நமக்குச் சொல்லத்தான் போகிறது; அந்த உண்மையைக் காலம் சொல்கின்ற நேரத்தில், நாம் எவ்வளவு ஏமாளியாக இருந்திருக்கிறோம் என்பதை நமக்கு நாமே தெரிந்துகொள்ளத்தான் போகிறோம்!

தி. மு. கழகத்தினை எதிர்க்கிறவன் கடுகளவு மனிதனாக இருந்தாலும், அவனுக்கு மலையளவு விளம்பரம் தர இந்த நாட்டில் இருக்கின்ற மன எரிச்சல்கொண்ட பத்திரிகைகள் தயாராக இருக்கின்றன; இதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்; அதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தால் மட்டும் போதாது; அவர்கள் பிரச்சாரம் நடைபெறுகின்ற நேரத்தில், 'அவர்கள் சொல்வது பொய்; கழகத்தினர் தூய்மையானவர்கள்' என்பதை நாட்டிற்கு உணர்த்திட வேண்டும்; நம் நடவடிக்கைகள் அவ்வாறு இருக்கவேண்டும்; அப்பழுக்கற்றவர்களாக இருக்கவேண்டும்; நாம் கறைபடாதவர்கள் என்பதை இந்த உலகத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

"இன்று நம்முடைய புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் தி. மு. கழகத்தைப்பற்றி எடுத்துச் சொல்லி வருகின்ற கருத்துக்களுக்கு – அவதூறுகளுக்குப் பதில் அளிக்கின்ற நேரத்தில் இம்மியளவும் இழிமொழிகளோ – அவரையோ அல்லது அவரது ஆதரவாளர்களையோ புண்படுத்துகின்ற சொற்களோ இடம்பெறாமல் பார்த்துக்கொள்வதில் நாம் அனைவரும் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

"இதை ஒரு இராசதந்திரமாகக்கூடச் சொல்லவில்லை, அப்படிச் சொல்லித்தான் நாம், நம் கட்சிக்கு – நம் வாதங்களுக்கு ஆள் சேர்க்க வேண்டும் என்ற நிலையிலேகூட இதனைச் சொல்லவில்லை; நம்முடைய மரபே அது – நம்முடைய அரசியல் பண்பாடே அது; எவ்வளவுதான் எதிரிகள் தரக்குறைவாகத் தாக்கினாலும், நாம் அரசியல் பண்பாட்டிலிருந்து எள்ளளவும் நழுவாமல் நம்முடைய கொள்கைகளை மக்களிடத்தில் எடுத்துச் சொல்கின்ற அந்தப் பழக்கத்தை நீண்ட நெடுங்காலமாக உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்"

என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினர்களிடையே உரையாற்றுகையில், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டார்; இரண்டு நாட்கள் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தை முடித்துவைத்துப் பேசுகையில் அவர் ஆற்றிய உரையின் சுருக்கமாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்று ஏற்பட்டிருக்கின்ற சோதனையை மிக அலட்சியமாகக் கருதிவிடக்கூடாது; இப்படிப்பட்ட சோதனைகளில் கழகம் பலமுறை வெற்றிவாகை சூடியிருக்கிறது என்றாலும், அந்த வெற்றிவாகை சூடுவதற்கு இங்கே கூடியிருக்கின்ற உங்களுடைய உழைப்பும் -- நீங்கள் தொடர்பு கொண்டு உழைக்கின்ற கழகக் கண்மணிகளுடைய திறனும் -- ஆற்றலும் -- தொண்டும் -- தியாகமும்தான் முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காப்பாற்றி வருகிறது!

நான்கு நாட்களாக எவ்வளவு அவதூறான செய்திகள் -- எவ்வளவு தாங்க முடியாத -- இதயத்தைக் கிழிக்கக்கூடிய -- கண் கலங்கச் செய்கின்ற பத்திரிகைச் செய்திகள் மட்டுமன்றித் துண்டறிக்கைகள் -- கேவலமான வார்த்தைகள் -- இவைகளையெல்லாம் நம்முடைய நண்பர்கள் மிகுந்த கொதிப்புடன் எடுத்துரைத்தார்கள்!

ஏசுகின்றனரே என அயர்ந்துவிடாதீர்!

அமைதி வழி நம் வழி -- அதுவே அண்ணா வழி!

நண்பர்களே -- இவைகள் எல்லாம் நமக்கும் புதியவை அல்ல; தி. மு. கழகம் தொடங்கிய காலத்திலிருந்தே இப்படிப்பட்ட அர்ச்சனைகளால்தான் நாம் வளர்ந்திருக்கிறோம்; ஏசல்களையும் -- தூற்றல்களையும் அர்ச்சனைகளாகக் கொண்டு வளருகின்ற ஆலயம்தான் தி. மு. கழகம்; ஆகவே, 'ஏசுகிறார்களே -- பேசுகிறார்களே' என்று யாரும் அயர்ந்துவிடக்கூடாது! அமைதி வழி நம் வழி -- அதுதான் அண்ணா வழி!

கழகம் கடைபிடிக்கவேண்டிய ஒன்று!

புரட்சி நடிகர் அவர்களுக்கு கடந்த நான்கைந்து நாட்களாக அவருடைய ஸ்டுடியோவிலே கூடுகின்ற கூட்டம் -- அல்லது அங்கே கொண்டு வந்து அவர் [illegible] காட்டப்படுகின்ற கூட்டம் ஏதோ ஒருவிதமான உணர்ச்சியை அவருக்கு உண்டாக்கி விடுகிறது; அந்த உணர்ச்சியின் காரணமாக அவர் ஏதேதோ பேசிவிடுகிறார்; அவைகளைப் பத்திரிகைகளிலே ஒன்றுக்கு மூன்றாகக்கூட்டி போட்டு விடுகிறார்கள்.

அவர் எது பேசுகிறார் -- என்ன பேசுவதில்லை என்பதல்ல பிரச்சினை; அவர் பேசுவதெல்லாம் இன்று கடைத்தெருவிற்கு வந்துவிட்ட செய்தியாகும்.

கழகத்தில் இருக்கின்ற எந்தக் குறையானாலும், அவைகளை நாம் ஒருவருக்கொருவர் கலந்து பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டி

(4-ம் பக்கம் பார்க்க)

தொண்டனை தலை குனிய வைக்காதீர்

இலட்சியத்தின் பின்னால் அனைவரும் இருப்போம்

எந்த ஒரு சக்தியும் கழகத்தை எதுவும் செய்ய இயலாது

சென்னை, அக். 17—

"நம்மிடம் ஆயிரம் கசப்பு உணர்ச்சிகள் இருந்தாலும் தயவு செய்து நேரிலே பேசுங்கள் -- வீட்டுக் கோர்த்துப் பேசுங்கள்; பொதுமேடைகளில் சில நேரங்களில் இப்படி வருகின்ற நேரத்தில், கண்ணியம் தவறி -- கடமை தவறிப் பேசும்போது கழகத்தின் சார்பில் நாம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறோம்.

நாம் அடித்துக் கொள்வதால் -- சண்டை போட்டுக் கொள்வதால் -- பிரச்சினை கடைத்தெருவிற்கு வருவதால் வேதனைப்படுபவர்கள் யார் -- எண்ணிப் பாருங்கள்; அவர்கள், மாவட்டச் செயலாளர்களோ -- வட்டச் செயலாளர்களோ -- சட்டமன்ற உறுப்பினர்களோ -- அமைச்சர்களோ அல்லர்!

அந்தச் செய்தியைப் படிக்கிறானே கழகத்தில இருக்கின்ற கடைசித் தொண்டன் -- அவன் தேநீர்க் கடையில் தேநீர் வாங்கி சாப்பிடுகின்ற நேரத்தில் -- அவன் அதை ஆசையாகச் சாப்பிட முடியாமல் தன்னுடைய கையில் இருக்கின்ற பத்திரிகைச் செய்தியைப் பார்த்துத் திகைக்கிறான் -- திகைக்கிறான்.

வெற்றிலைப் பாக்குக் கடையில் பேசிக்கொண்டிருக்கிறானே வேடிக்கையாக -- அந்தத் தொண்டன் அந்தச் செய்தியைப் பார்க்கிறான்; 'கழகத்தில் கட்டுப்பாடு இல்லையாமே -- அவர்களுக்குள் சண்டையாமே' என்று அவன் திகைக்கிறான்!

அந்தத் தொண்டனைப் பார்த்து எதிர்க் கட்சிக்காரன் கேலி பேசுகிறான் -- அவன் தலை குனிகிறான்; அந்தத் தொண்டன் -- நான் முதலமைச்சராக வீற்றிருக்கப் பணியாற்றிய தொண்டன்; நாவலர் கல்வி அமைச்சராக உட்கார்ந்திருக்கப் பணியாற்றிய தொண்டன்; இந்த அமைச்சரவை கோட்டை கொலுமண்டபம் ஏறப் பாடுபட்ட தொண்டன்; சிலரைப் புகழ்மலையில் உட்கார வைத்த தொண்டன்; அந்தத் தொண்டன், வெட்கத்தால் தலை குனிகிறான் -- அவமானத்தால் தலை கவிழ்கிறான்!

ஆகவே, அந்தத் தொண்டனுக்கு மரியாதை செலுத்த வேண்டும்;

(4-ம் பக்கம் பார்க்க)

எதிர்க் கட்சிகள் ஏற்கனவே அவர்களுக்குள் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் இப்போது செயல்படுத்தப்படுகிறது ★ வழக்கமாகச் சமூக விரோதிகள் கலகத்தைத் தூண்டிவிடப் பிரச்சாரம் செய்கின்றனர் ★ கழக அரசுக்கு விரோதமாக சட்டம்--ஒழுங்கினைக் குலைக்கச் செய்யப்படும் முயற்சிகளை முறியடிப்பதில் பொதுமக்களுக்குக் கழக அமைப்புகள் தற்காப்பு அரண்களாக விளங்கவேண்டும்

இமயமாகத் தி. மு. கழகம் எழுகிறது

வன்முறைகளைத் தாங்கும் கேடயமாகத் திகழும்

கழகத்தை அழிக்க நினைப்போருக்குப் பொதுக்குழு அறிவுறுத்தல்

வன்முறைகளைத் தூண்டிவிடுவோர்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்குக் கோரிக்கை

சென்னை, அக். 14—

"திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்மீது எடுத்துள்ள நடவடிக்கையைத் தொடர்ந்து, ஏதோ - தமிழகமே கொந்தளித்துக் கொண்டிருப்பதுபோலச் செய்திகள் வெளியிடப்படுகின்றன; இது, கழக விரோதிகள் வழக்கமாகச் செய்கின்ற - கலகத்தைத் தூண்டிவிடுகின்ற பிரச்சாரம்தான்!

"இந்தப் பிரச்சினையில் நுழைந்துகொண்டு எதிர்க் கட்சியினர் சிலர் காட்டுகின்ற ஆர்வத்தைப் பார்க்கின்றபோது, ஏற்கனவே திட்டவட்டமாக அவர்களுக்குள் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் இப்போது செயல்படுத்தப்படுகிறது என்று உறுதியாக நம்பிட இடமிருக்கிறது.

தமிழகத்தில் கழக அரசுக்கு விரோதமாகச் சட்டம் - ஒழுங்கினைக் குலைக்க நடத்தப்படும் முயற்சிகளைப் பொதுமக்களுக்கு எடுத்து விளக்குவதில் கழகத் தோழர்கள் முன்நிற்பார்கள் என்பதிலும், அண்ணா அவர்கள் உருவாக்கி நம்மிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்ற கழகத்தையும் - கழக அரசையும் காப்பாற்றக் கழக அமைப்புகள் தற்காப்பு அமைப்புகளாக விளங்கும் என்பதிலும் எள்ளளவு சந்தேகமும் இல்லை.

வன்முறைகளைத் தாங்கும் கேடயமாகத் தி. மு. கழகம் திகழும் - எதிர்ப்புகள் முட்டி மோதி நொறுங்கும் இமயமாகத் தி. மு. கழகம் எழுந்து நிற்கிறது என்பதற்கு அடையாளம்தான், செயற்குழு - பொதுக்குழு எடுத்த ஒருமித்த முடிவுகள் என்பதைக் கழகத்தை அழிக்க நினைப்போர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

"ஒரு கட்சியின் பிரச்சினைக்காக, அதில் தொடர்பு ஏதுமில்லாதவர்கள் - தொடர்பு இருப்பதுபோல் நடித்துக்கொண்டு வன்முறைகளைத் தூண்டிவிட்டாலோ - வன்முறையில் ஈடுபட்டாலோ அவர்கள், சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாகவேண்டும்; இது, 'சட்டத்தையும் - அமைதியையும் காக்கவேண்டிய ஒரு அரசின் பொறுப்பு' என்ற முறையில், உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கத் தமிழக அரசை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது"

என்று தீர்மானம், அக். 14-ம் நாள் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேறியது; இத்தீர்மானத்தை, மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் முன்மொழிந்தார்; திரு. து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ. வழிமொழிந்தனர்.

எம்.ஜி.ஆர். விவகாரம் -- பொதுக்குழு கட்டளை

எந்த சமரச முயற்சியிலும் ஈடுபட வேண்டாம் எனக் கோரிக்கை

சென்னை, அக். 14—

"எம். ஜி. ஆர். விவகாரம் பற்றி இனிமேல் எந்தச் சமரச முயற்சியிலும் ஈடுபட வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

"பொதுக்குழு உறுப்பினர்களை மதிக்கின்ற கழகத் தலைமை அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினர்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"வேறு ஒருசிலர் கழகத்தின் கட்டுப்பாட்டுக்கு விரோதமாகச் செயல்படுவோர்களேயானால், அவர்களையும் கட்சியிலிருந்து விலக்க வேண்டும் என்று பொதுக்குழு உறுப்பினர்கள் கருத்தறிவித்தனர்; முறைப்படி பொதுச்செயலாளர் நடவடிக்கை எடுப்பார்.

"அப்படிப்பட்டவர்கள் எந்தப் பதவியிலிருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்--என்ற உறுதியைப் பொதுக்குழு உறுப்பினர்களுக்குக் கலைஞரும்--பொதுச்செயலாளரும் அளித்தனர்."

கேள்வி:—"வேறு சிலர் என்றால் யார்?"

பதில்:—"இரண்டு அல்லது மூன்று நாட்களில் தெரியும்."

கேள்வி:—"அவர்களாகச் சமரசத்திற்கு வருவார்களானால் ஏற்றுக்கொள்வீர்களா?"

பதில்:—"நாங்கள் பொதுக்குழுவுக்குக் கட்டுப்பட்டவர்கள்."

கலைஞர் விளக்கம்

அக். 14-ம் நாள் காலையில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்ட முடிவுகள் பற்றிச் செய்தியாளர்களிடம் கலைஞர் விளக்குகையில் கூறியதாவது:—

முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் காஞ்சி மணிமொழியார், ஏ.கே. தங்கவேலர், நாமக்கல் கவிஞர், புலவர் குழந்தை, புலவர் செல்வராஜ், தி.மு.க. தொழிற் சங்கத் தலைவர் பிரதாப் சந்திரன், நெல்லை சண்முகராஜ், சிவகங்கை முத்து, ஆலந்தூர் லிங்கன் ஆகியோர் மறைவுக்கும் பொதுக்குழுவில் இரங்கல் தெரிவித்துக்கொள்ளப்பட்டது; உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்றனர்.

அதன் பிறகு துணைப் பொதுச் செயலாளர் க. இராசாராம் அவர்கள், தஞ்சையில் நடைபெற்ற பொதுக்குழு நடவடிக்கை விவரங்களைப் படித்தார்; பொதுக்குழு அதனை ஏற்றுக்கொண்டது.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என்.வி. நடராசன் அவர்கள், 24—2—72, 22—3—72, 7—4—72, 14—6—72 ஆகிய நாட்களில் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானங்களைப் படித்தார்; அதற்கான ஒப்புதலைப் பொதுக்குழு ஒருமனதாக அளித்தது.

தணிக்கைக் குழு அறிக்கையை ஏ.வி.பி. ஆசைத்தம்பி படித்தார்.

பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1—7—69 முதல் மார்ச் 1971 முடிய வரவு-செலவுக் கணக்குகளைப் படித்தார்; அதுபோது அவர் கழகத்தின் கணக்குகள் எவ்வாறு வைக்கப்படுகின்றன -- எவ்வாறு தணிக்கை செய்யப்படுகின்றன -- கணக்கு விவரங்கள் எவ்வாறு இருக்கின்றன என்ற விளக்கங்களை எடுத்துரைத்தார்.

வரவு-செலவுக் கணக்குகள் பொதுக் குழு உறுப்பினர்களால் ஒருமனதாக ஏற்கப்பட்டது.

அதன் பின்னர், எம்.ஜி.ஆர். மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி., சிட்டி பா[illegible] எம்.பி., எஸ்.எஸ். தென்னரசு [illegible]எல்.சி., வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., கோ. செங்குட்டுவன், கோவை மு. இராமநாதன் எம்.எல்.சி., கோ.சி. மணி எம்.எல்.சி., பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் கருத்துத் தெரிவித்து -- எடுத்த நடவடிக்கை எவ்வளவு சரியானது என்பதை விளக்கினர்.

அதன் பிறகு கழகத் தலைவர் ஒரு மணி நேரத்திற்கு மேல் உரையாற்றுகையில், எம்.ஜி.ஆர். மீது எடுத்த நடவடிக்கைகளுக்கான காரணங்கள் குறித்தும், கழகக் கட்டுப்பாடு--வளர்ச்சி ஆகியவைகள் குறித்தும், இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு, 'ரசிகர்' என்ற பெயரால் விஷமிகளும் வேறு சிலரும் வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபடுவது குறித்தும், ஏற்கனவே பல்வேறு சோதனைகளில் கழகம் அமைதி காத்து வெற்றிகளைக் குவித்தாற்போல் இந்தச் சோதனையிலும் வெற்றி காண வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்.

"இப்போது ஏற்பட்டுவிட்ட இந்தப் பிரச்சினைகளினால் கழகம் ஒரு சிறிதும் பாதிக்கப்பட்டுவிடவில்லை; ஆகவே, கழகத்தினர் தெம்போடும் கட்டுப்பாட்டுணர்ச்சியோடும், 'தனி மனிதர்களை விடக் கழகம் தான் பெரிது' என்பதை நாட்டுக்கு அறிவித்துவிட்டார்கள்" என்றும் விளக்கினர்.

பின்னர், தலைமைச் செயற்குழு எம்.ஜி.ஆர். மீது எடுத்துள்ள ஒழுங்கு நடவடிக்கை பற்றிப் பொதுக்குழுவுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட தீர்மானம் ஓட்டெடுப்புக்கு விடப்பட்டது; வந்திருந்த பொதுக்குழு உறுப்பினர்கள் 277 பேரும் செயற்குழு தீர்மானத்திற்கும், கழகத் தலைவரும்--பொதுச் செயலாளரும் எம்.ஜி.ஆர். மீது எடுத்த ஒழுங்கு நடவடிக்கைக்கும் ஆதரவாகவும் வாக்களித்தார்கள்; தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது."

பிற்பகலில் கூடிய பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பின், இரவு 9 மணியளவில் செய்தியாளர்களைச் சந்தித்த கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், 'திரு. எம்.ஜி.ஆர். பிரச்சினையையொட்டிக் கிளர்ச்சிகள் செய்து கைது செய்யப்பட்டவர்கள் ஐம்பதினாயிரம் பேர் என்றும்-- இருபதினாயிரம் பேர் என்றும் சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்தி முழுக்க முழுக்கத் தவறாகும்' என்றார்.

"மாநிலம் முழுவதிலும் 1,625 பேர்தான் கைது செய்யப்பட்டனர்; இதில் விடுதலை செய்யப்பட்டவர்கள் போகச் சிறையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 1,500-க்கும் குறைவாகவே இருக்கும்; இந்த நிலையில், பீதி ஏற்படுத்தும் அளவுக்குப் பத்திரிகைகள் செய்தி வெளியிடுவது வருந்தத்தக்கதாகும்"

'சுதேசமித்திரன்' ஏட்டில் தாம் கூறியதாக வெளிவந்துள்ள ஒரு செய்தியின் தொடர்பாகத் தனது மறுப்பை எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த ஏட்டுக்குத் தந்தி மூலம் அனுப்பி--அதன் பிரதிகளைக் கழகத் தலைவருக்கும்--பொதுச்செயலாளருக்கும் அனுப்பியிருப்பதைத் தெரிவித்து அதனைப் படித்துக் காட்டினர்.

தவறு செய்பவர்களைத் தாலாட்டிக்கொண்டிருக்க இயலாது

மேலும் அவர், செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், "தவறு செய்கின்றவர்களைத் தாலாட்டிக்கொண்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் வழக்கமல்ல" என்று குறிப்பிட்டார்.

அக். 15-ம் நாள் காலையில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, கழகத் தலைவர் கலைஞர் கூறியதாவது:—

"பொதுக்குழு உறுப்பினர்கள் 310 பேர்களில் 283 பேர் வந்திருந்தனர்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் 185 பேர்களில் 171 பேர்களும்-- மேலவை உறுப்பினர்கள் 30 பேர்களில் 27 பேர்களும் வந்திருந்தனர்.

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் 25 பேர்களில் 22 பேர்களும்--மேலவை உறுப்பினர்கள் 12 பேர்களில் 9 பேர்களும் வந்திருந்தனர்.

நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி., இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி., கோவை செழியன் எம்.எல்.ஏ. ஆகியோர் இன்று பொதுக்குழுவுக்கு வந்திருந்தனர்.

நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் புதுவை சிவப்பிரகாசம் உடல் நலமில்லாததால் கூட்டத்துக்கு வரவில்லை; எஸ்.எஸ். மாரிசாமி டெல்லியில் இருந்ததால் வரவில்லை.

நாஞ்சில் கி. மனோகரனும்-- கோவை செழியனும் தாங்கள் சமரச முயற்சியில் ஈடுபட்டதாகவும்--கட்சித் தலைமையின் அனுமதியுடன்தான் அந்த முயற்சியை மேற்கொண்டதாகவும்-- கட்சித் தலைமையும், செயற்குழுவும், பொதுக்குழுவும் எடுத்த முடிவுகளுக்குத் தாங்கள் கட்டுப்படுவதாகவும் அறிவித்தார்.

எஸ். எஸ். இராசேந்திரன், 'உடல் நலமின்மையில் நேற்று பொதுக்குழுக் கூட்டத்திற்கு வர இயலவில்லை' என்றும், 'கழகத் தலைமையும் -- பொதுக்குழுவும் எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன்' என்றும் கூறினர்.

'நான், அண்ணன் எம். ஜி. ஆர். பக்கம்தான் எப்போதும் இருப்பேன் என்று பத்திரிகையில் வந்த செய்தி தவறானதாகும்" என்றும் அவர் விளக்கம் அளித்தார்.

மீண்டும் பொதுக்குக் கூட்டம், பிற்பகல் 4-மணிக்கு தொடங்கி இரவு 7-மணி வரையில் நடைபெற்றது.

கூட்டத்தை முடித்து வைத்துக் கழகத் தலைவர் கலைஞர் பேசினர்.

பொதுக்குழுக் கூட்டம் முடிந்ததும், செய்தியாளர்களுக்கு அவர் பேட்டி அளித்தார்; அதுபோது அவர் கூறியதாவது:—

"பொதுக்குழுக் கூட்டத்தை முடித்துவைத்து நான் பேசினேன்; நாவலர் -- தில்லை வில்லாளன் -- அலமேலு அப்பாதுரை ஆகியோரும் பேசினர்.

ஆலந்தூர் மோகனரங்கம் (ஆலந்தூர் நகராட்சித் தலைவர்) கூட்டத்துக்கு வந்திருந்தார்; 'சமரச முயற்சிக்காக வந்திருந்தேன்' என்று அவர் தெரிவித்தார்; மேலும், 'பொதுக்குழுவில் இனிமேல் சமரசத்துக்கு இடம் இல்லை என்று முடிவெடுத்ததால், கழகக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடப்பேன்' என்றும் அவர் தெரிவித்தார்."

செய்தியாளர்:— "கட்சித் தலைவர் -- மாவட்ட செயலாளர்கள்-- கிளைக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் சொத்துக் கணக்குக் காட்ட வேண்டும் என்று எம். ஜி. ஆர். கூறுகிறாரே -- நீங்கள் ஏதும் காட்டுவதாக அறிக்கை விடுவீர்களா?"

கலைஞர்:— "இது வரையில் எந்த கட்சியிலாவது அந்த மாதிரி கணக்குக் காட்டுகிறார்களா?"

பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் பெற்ற வெற்றி

பிற மாநில அரசுகளும் ஆர்வத்துடன் கேட்டறிகின்றன

பரனூர் பிச்சைக்காரர் விடுதி ஆண்டு விழாவில் அமைச்சர் சத்தியவாணிமுத்து தகவல்

செங்கற்பட்டு, அக். 17—

"தமிழக அரசின் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் பற்றி பிற மாநிலங்களும் ஆலோசனை கேட்கின்றன -- விவரங்களைச் சேகரிக்கின்றன; அந்த அளவுக்கு இந்தத் திட்டம் வெற்றி பெற்றிட -- சிறப்படைய முதலமைச்சர் கலைஞர் அவர்களே காரணமாவார்"

என்று அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள பரனூரில் கட்டப்பட்டுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் விடுதியின் முதலாண்டு விழாவினைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் என். கிருஷ்ணமூர்த்தி தலைமைவகித்தார்; மாவட்ட மருத்துவ அதிகாரி லிங்கையா வரவேற்றார்; டாக்டர் வைத்தியநாதன் ஆண்டறிக்கை படித்தார்.

விழாவினைத் துவக்கிவைத்த அமைச்சர் சத்தியவாணிமுத்து பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"பல இடங்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதிகளை அமைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு எந்த நோக்கத்துடன் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் தொடங்கப்பட்டதோ அந்த நோக்கம் நல்ல முறையில் அனைவராலும் புரிந்துகொள்ளப்பட்டு -- அனைவரும் பாராட்டும் விதத்தில் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இங்கே பணிபுரியும் ஊழியர்கட்கு இங்கேயே வீடு கட்டிக்கொடுக்க அரசு முன்வந்துள்ளது; வீடு இங்கேயே இருந்தால் ஊழியர்கள் மேலும் பணியாற்ற உதவியாக இருக்கும்.

இங்கே உள்ள மறுவாழ்வு இல்லத்தைப்போல், திருவண்ணாமலை -- கோவை -- மதுரை -- சேலம் ஆகிய இடங்களில் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்படும்."

இல்லக் கண்காணிப்பாளர் சண்முகசுந்தரபாண்டியன் நன்றி கூறினர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய இரஷ்யா முனைந்திருக்கிறதாம்.

இத்தகவலை, அமெரிக்க இராணுவத் துப்பறியும் பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர்.

ஏற்கனவே 12 விமானங்களை இரஷ்யா உற்பத்தி செய்திருக்கும் என்று அவர்கள் மதிப்பிடுகின்றனர்; இன்னும் எத்தனை விமானங்களை இரஷ்யா உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருக்கிறது என்பது பற்றிய தகவல் அவர்களுக்குக் கிடைக்கவில்லையாம்.

சனநாயகம் பற்றிய உண்மைகள்

மக்கள் உணரும்படி செய்வது அவசியம்

தேர்தல்களில் வாக்கு அளிக்கும் மக்களின் அறியாமை -- ஆய்வுமூலம் தெரியவரும் உண்மைகள்

விசாகப்பட்டினம், அக். 17—

இந்தியாவில் தேர்தல்களில் வாக்கு அளிக்கும் மக்கள் எவ்வளவு அறியாமையில் மூழ்கியிருக்கிறார்கள் என்பது அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி ஒன்றின்மூலம் தெளிவாகியிருக்கிறது; சென்ற ஆண்டு மக்களவைக்கு நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

ஐதராபாத் நாடாளுமன்றத் தொகுதியில் 434 வாக்காளர்களிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன; இவர்களில் 143 பேர் நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள்; எதற்காக வாக்கு அளிக்கிறோம் -- எந்தப் பிரச்சினைகளை வைத்துத் தேர்தல் நடத்தப்படுகிறது என்றுகூட பெரும்பாலோருக்குத் தெரியவில்லை.

மக்களவை உரிய காலத்திற்கு முன்பு கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடத்தப்படுகின்றன என்பது அவர்களுக்குத் தெரியவில்லை; எதற்காக வாக்குப் பதிவு நடக்கிறது -- காங்கிரசு ஏன் பிளவுபட்டது -- இத்தேர்தலில் உள்ள முக்கியப் பிரச்சினைகள் என்ன என்று பெரும்பாலோருக்குத் தெரியவில்லை. கேள்விகளுக்குப் பதில் அளித்தவர்களில் 93 சதவிகிதத்தினர் வாக்கு அளித்தவர்களாவர்.

60 சதவிகிதத்தினருக்கு சோஷலிசம் என்றால் என்ன என்பது புரியவில்லை; 40 சதவிகிதத்தினருக்கு சனநாயகம் என்றால் என்ன என்பது புரியவில்லை.

சனநாயகம் என்றால் பொருளாதாரத்தில் ஏற்படும் நன்மைகள் என்று 55 சதவிகிதத்தினர் நினைத்தனர்.

இந்தியாவில் சனநாயகம்வெற்றி பெற்றிருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கு 24 சதவிகித கிராமப்புற வாக்காளர்கள் -- 59 சதவிகித நகர்ப்புற வாக்காளர்களும் பதில் அளிக்கவே இல்லை.

நாட்டில் வறுமை நிலவுகிறது என்பதை அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள்; பல கேள்விகளுக்கு சரிபாதிப் பேர், 'எங்களுக்குத் தெரியாது' என்று பதிலளித்திருக்கின்றனர்.

இந்த நிலைமையில், 'சனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், சனநாயகத்தைப் பற்றிய உண்மைகளை மக்கள் உணரும்படி செய்ய வேண்டியது முக்கியமானதாகும்' என்று ஆராய்ச்சியை நடத்தியவர்கள் கருதுகின்றனர்.

சென்னை மருத்துவமனையில்

ஈ. என். டி. பிரிவு

மேல் பட்டப் படிப்பு நிலையமாக உயர்வு

சென்னை, அக். 17—

சென்னைப் பொது மருத்துவமனையின் காது -- மூக்கு -- தொண்டை (ஈ என். டி.) சிகிச்சைப் பிரிவு, முழு அளவு மேல் பட்டப் படிப்பு நிலையமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இந்நிலையத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அக் 18-ல் துவக்கிவைப்பார்.

நவீன சாதனங்களை வாங்குவதற்காக அடுத்த 5 ஆண்டுகளுக்கு இந்நிலையத்துக்கு ரூ. 2 இலட்சம் ஓராண்டு மானியமாக மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது.

இந்நிலையத்துக்கு ரூ. 20 இலட்சம் செலவில் தனிக் கட்டடம் கட்டப்படும்.

மேல் பட்டப் படிப்புக்காக (மாஸ்டர் டிகிரி) இந்நிலையம் 6 மாணவர்களுக்கும், டிப்ளமோவுக்காக 12 பேருக்கும் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சியளிக்கும்.

நர்சுகள், சுகாதாரப் பார்வையாளர்கள், நர்சிங் துறையில் பி. எஸ்சி. மாணவர் ஆகியோருக்குப் பயிற்சியளிப்பதும் இப்பிரிவின் கற்பிக்கும் திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

பொது ரணச் சிகிச்சை -- கண் சிகிச்சை—கூடிப நோய் போன்றவைகளிலும் மேல் பட்டப்படிப்பு பயிற்சியை இப்பிரிவு அளிக்கும்; இத்தகைய நிலையம் நாட்டிலேயே இதுதான் முதலாவதாகும்.

தற்போது ஈ. என். டி. பிரிவு நாள்தோறும் 500 நோயாளிகட்கு சிகிச்சை அளித்து வருகிறது; நாட்டிலேயே மிக நவீன சிகிச்சை சாதனங்கள் இப்பிரிவில் உள்ளன.

ஆடியோ மீட்டர்கள் போன்ற தனிக் கருவிகளும் இப்பிரிவில் உள்ளன.

பூம்புகாரில் தமிழகக் கலை-- பண்பாட்டுக் கல்லூரி

சென்னை, அக். 17—

"தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் துணை நிறுவனமாகத் தஞ்சை மாவட்டம் கா. மேலையூர் -- காவிரிப்பூம்பட்டினத்தில் இயங்கிவரும் பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியைத் தன்னுடைமையுள்ள தமிழ்க் கலை -- பண்பாட்டுக் கல்லூரியாக உருவாக்குவதற்குத் தமிழ்நாடு தெய்வீகப் பேரவை திட்டமிட்டிருக்கிறது"

என்று தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் தலைவர் குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி. இங்கு நிருபர்களிடம் கூறினர்.

இந்தக் கல்லூரியில் கீழ்க்கண்ட பாடங்கள் கற்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்:—

இசை -- வாய்ப்பாட்டு, வாத்திய இசை, நடனம் -- நாடகம், இலக்கியம் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பு, தென்னிந்திய வரலாறு முதுகலைப் பட்டப் படிப்பு, சிற்பம்-- ஓவியம் -- சித்த மருத்துவம் -- சமயத் தத்துவப் பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்பு, கல்வெட்டு -- புதைபொருள் படிப்பு ஆராய்ச்சி, திருக்கோவில் அர்ச்சகர் பயிற்சி.

இந்தக் கல்லூரி உருவாக வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் நிறைந்த ஆர்வம் கொண்டிருப்பதாகக் குன்றக்குடி அடிகளார் தெரிவித்தார்.

"தீண்டாமை ஒழிப்புக்காகத் தீவிர பிரச்சார இயக்கம் ஒன்றை மேற்கொள்ளவும் பேரவை எண்ணியிருக்கிறது" என்றும் அவர் கூறினர்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

கோட்டம் எண் I

ஒப்பந்த அறிவிப்பு

Rc No 102/D2/71 dated 7—10—72

கீழ்க்காணும் வேலைகளைச் செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்டு மேலுறையில் முறையே வேலையின் பெயரும் -- ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் -- குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண்-I நிர்வாகப் பொறியரால் 2-11-1972 மாலை 3-மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள், நேரில் இருக்க முன்வரும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

வரிசை எண்	வேலையின் பெயர்	வேலையின் மொத்த மதிப்பீடு	பொறுப்புத் தொகை	ஒப்பந்த முறை	ஒப்பந்த விவர அறிக்கையின் விலை
	சென்னை இராயபுரம் காசிமேடு குப்பத்தில் உள்ள T.D. 203/70 மாதிரியில், நான்கு அடுக்குக் குடியிருப்புப் பிளாக்குகளாகக் கீழ்க்காணும்கூடுதல் பிளாக்குகள் கட்டுதல்				
1.	தொகுதி II ஒன்றில் 40அடங்கிய பிளாக் ஒன்று (B-IV பிளாக்)	ரூ. 2,20,000	ரூ. 3,300	முழுத் தொகை	ரூ. 15+ விற்பனைவரி
2.	தொகுதி III ஒன்றில் 32அடங்கிய பிளாக் ஒன்று (C-IV பிளாக்)	ரூ. 1,76,000	ரூ. 2,640	முழுத் தொகை	ரூ. 15+ விற்பனைவரி
3.	தொகுதி III ஒன்றில் 32 அடங்கிய பிளாக் ஒன்று (C-V பிளாக்)	ரூ. 1,76,000	ரூ. 2,640	முழுத் தொகை	ரூ 15+ விற்பனைவரி

ஒப்பந்த விவர அறிக்கைகளை, 25—10—72 முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-மணி முதல் மாலை 3-மணிவரை, சென்னை-1 இரண்டாவது கடற்கரைச் சாலை, ஜகாங்கீர் தெரு, 35/37 எண்ணில் உள்ள குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண்-I, நிர்வாகப் பொறியர் அலுவலகத்தில், ஒப்பந்த விவர அறிக்கைக்கான விலையையும் விற்பனை வரியையும் சேர்த்து, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி, சென்னை கதீட்ரல் கிளையில், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண்-I நிர்வாகப் பொறியர் பெயரில், 'சேவிங்ஸ் பாங்கிக் கணக்கு' என்ற தலைப்பின்கீழ் செலுத்தியதற்கான 'செலானை'க் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏதாவது ஓர் ஒப்பந்தப் புள்ளியையோ, எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தக் காரணமும் காட்டாமலே நிராகரிப்பதற்கு உரிமை உண்டு.

(ஒம்) எம். ஆத்மநாதன்
நிர்வாகப் பொறியர்,
கோட்டம் எண்-I

முதுமை -- உடல் ஊனமுள்ள அரசியல் தியாகிகட்கு விடுதி நிறுவப்படும்

புதுடில்லி, அக். 17—

"வயோதிகர்களாகவும் -- உடல் ஊனமுள்ளவர்களாகவும் உள்ள அரசியல் தியாகிகளுக்காக விரைவில் விடுதி ஒன்றை அரசு நிறுவும்; அவர்கள் அவ்விடுதியில் சேர்க்கப்படுவார்கள்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி. உள்விவகாரம் பற்றிய மத்திய எம்.பி.-க்கள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில அறிவித்தார்.

"இந்த விடுதியை மத்திய சுகாதார அமைச்சகம் நிறுவும்; அரசு செலவில் வயோதிகம் -- உடல் ஊனமுற்ற அரசியல் தியாகிகள் இவ்விடுதியில் ஆதரிக்கப்படுவர்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

'பென்ஷன்' தொகை கோரி அரசியல் தியாகிகளிடமிருந்து 1,00,900 விண்ணப்பங்கள் வந்துள்ளன; மொத்த சிறைத் தண்டனைக் காலம் 6 மாதத்துக்குக் குறைவு அல்லது ஆண்டு வருமானம் ரூ 5,000-த்துக்குமேல் உள்ளது என்ற காரணத்தின்மீது 174 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன; மீதமுள்ள விண்ணப்பங்களை அரசு இன்னமும் பரிசீலித்து வருகிறது.

7,897 விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்டவரை மாநில அரசுகளிடமிருந்து மேற்கொண்டு விவரங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

பென்ஷனுக்காக அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை 4,126.

திருவெறும்பூரில் புதுகலைக் கல்லூரி

வகுப்புகள் பற்றி விளக்கம்

திருச்சி, அக். 17—

திருச்சியை அடுத்த திருவெறும்பூரில், அடுத்த கல்வியாண்டில் (1973—74) புதிய கலைக் கல்லூரி ஒன்றைத் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய கல்லூரியில், கலை-- அறிவியல் -- வாணியம் முதலிய துறைகளில் வகுப்புகள் நடக்கும்.

இதைத் தவிர, திருவெறும்பூர் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக இந்தக் கல்லூரியில் பகுதி நேர வகுப்புக்களும் நடக்கும்.

தொழிற்பயிற்சி வகுப்புக்களும் நடத்தப்படும்.

துவக்கத்தில் இங்கு புகுமுக வகுப்பு மட்டுமே இருக்கும்.

திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற தொடக்கக் கட்டக் கூட்டத்தில், இந்தக் கல்லூரியின் அமைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டது; திருச்சி மாவட்டக் கலெக்டர் டி. பி. பாரதி தலைவராக இருப்பார்; கே. காமாட்சி எம்.எல்.ஏ. செயலாளராகவும், மாவட்ட நல அதிகாரி கே. பிச்சை பொருளாளராகவும் இருப்பர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யதுதான் முறை; இது, அவருக்குமட்டுமே சொல்கின்ற அறிவுரையாக இல்லாமல், எதிர்காலத்தில் கழகம் கடைப்பிடிக்கவேண்டிய ஒன்று என்பதையும் இங்கே கூடியிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தீமையில் நன்மையும் ஏற்படுகிறது

நாவலர் அவர்கள், 'சில தீய்குகளினால் சில நன்மைகள் உண்டாகின்றன' என்று சொன்னார்; 'நம்முடைய கழக நண்பர்கள் இனிமேல் தீவிரமாகப் பணியாற்றுவார்கள்; கொஞ்சம் மதமதப்பாக இருந்தவர்கள் எல்லாம்கூட இனி கழகத்தைக் கட்டிக்காப்பதில் முன்நிற்பார்கள்' என்று சொன்னார்; அந்தத் தீவிரம் மட்டும் போதாது என்பது என் எண்ணம் -- கழகத்திலே ஒற்றுமை கட்டிக்காக்கப்படவும் வேண்டும்.

சிற்றாறுகளாக -- சிறு வாய்க்கால்களாகச் செல்வீர்

திராவிட முன்னேற்றக் கழகத்தை யாரும் அசைக்க முடியாது -- ஆட்ட முடியாது; அது இமயமலை போல் இருக்கிறது; அதிலே மோதித் தோற்றவர்கள்தான் பலரே தவிர, இதை யாரும் அசைக்க முடியாது என்பதற்குக் கடந்த நான்கு நாட்களாகச் சென்னையில் கூடியுள்ள செயற்குழுவும் -- பொதுக்குழுவும் சாட்சியாக இருக்கின்றன.

நாவலர் அடிக்கடி மாநாடுகளில் சொல்வார் -- 'பொங்கி வருகின்ற பேராறுகளாக இந்த மாநாட்டில் வந்திருக்கின்ற நீங்களெல்லாம், பிறகு சிற்றாறுகளாக -- கிளை நதிகளாக -- சிறு வாய்க்கால்களாகப் பரவி வயல்களுக்குச் செல்வதுபோல், நீங்கள் ஆங்காங்கு கிளைக் கழகங்களுக்கு நம்முடைய கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும்' என்று! அதைத்தான் உங்களுக்கு இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்; அந்தப் பணியை நாம் வேகமாகச் செய்து முடிக்க வேண்டும்.

மனத்திலே பதிய வைத்துப் பணியாற்றுவீர்

தமிழகமெங்கும் நம்முடைய கழகப் பிரசாரம் வெகு வேகமாக நடைபெற்றாக வேண்டும்; இதிலே 'அவர் அந்தப் பக்கம் -- இவர் இந்தப் பக்கம்' என்று சொல்லிக்கொண்டிருப்பதில் யாரும் தயவு செய்து நேரத்தை வீணாக்க வேண்டாம்!

சில நேரங்களில் எங்கேயாவது ஒரு குற்றம் நடந்து -- போலீசார் வந்து, 'இந்தக் குற்றத்துக்கு யார் உடந்தை' என்று கேட்கும்போதில், உடனே உங்களுக்குப் பிடிக்காதவர்களைப் பார்த்து, 'இவன்தான்' என்று சொல்லிவிடும் நிலைமையை ஏற்படுத்திவிடக்கூடாது; அந்த வேலைகளை மட்டும் கழக நண்பர்களே -- இந்த நேரத்தில் யாரும் செய்ய வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்; அப்படிச் செய்தால், நாம், நம்மையறியாமலே கழகத்தினைப் பிளக்க எண்ணுகின்றவர்களுக்கு ஆள் சேர்த்துக்கொடுக்கிறோம் என்று பொருள்; அதை நீங்கள் தயவுசெய்து மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

எந்தக் கணக்கைக் காட்ட மறுத்தோம் ?

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களால் குறைசொல்லப்படுவது, 'கணக்குக் கேட்டேன் -- என்னை விலக்கிவிட்டார்கள்' என்ற இந்த இரண்டு வார்த்தைகள்தான்; எந்தக் கணக்கை அவர் கேட்டார் -- எந்தக் கணக்கைக் காட்ட நாம் மறுத்தோம் என்பது தான் பிரச்சினை; இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களிலே பலர் மாவட்டச் செயலாளர்களாக இருக்கிறார்கள்; மேலவை உறுப்பினர்களில் மாவட்டச் செயலாளர்கள் இருக்கிறார்கள்; சட்டமன்ற உறுப்பினர்களில் சில பேர் வட்டச் செயலாளர்களாக இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம், ஏற்கனவே 1969-ம் ஆண்டில் சட்டமன்றத்திலே கணக்குக் காட்ட வேண்டும் என்ற பட்டியலில் வருகிறவர்கள்தான்; செயற்குழுவில் இருக்கின்றவர்களில் 10 அல்லது 15-க்கு மேற்பட்டவர்கள் சட்டப் பேரவையிலோ -- மேலவையிலோ கணக்கை வைத்துத் தங்களுடைய கணக்குகளை மட்டுமன்றி குடும்பத்தினரின் சொத்துக் கணக்குகளையும் காட்டிக் கொண்டிருப்பவர்கள்தான்!

போகின்ற போக்கில் புழுதியை வாரி இறைப்பதா ?

ஆகவே, இதில் எதுவும் புதிதல்ல; வேண்டுமென்றே போகின்ற போக்கில் புழுதியை வாரி இறைத்துவிட்டுப் போவதைப்போல், 'கணக்குக் காட்டு -- கணக்குக் காட்டு' என்கிறார்கள்; 18.000 கிளைக் கழகச் செயலாளர்களின் கணக்கைக் காட்ட நடைமுறையில் இயலாது என்பது அவருக்கே தெரியும்; அவர்கள் சொத்தற்றவர்கள் என்பதும், அப்பழுக்கற்றவர்கள் என்பதும் அவருக்கும் புரியும்.

நாம் ஒன்றைத் தயவுசெய்து உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்; உள்ளபடியே கழகத்தில் இருக்கின்ற என்னையோ -- பொதுச் செயலாளரையோ அல்லது அமைச்சர்களையோ அல்லது 10 15 பேர்களையோ, மதுரை முத்து போன்ற அவருக்குப் பிடிக்காத சில மாவட்டச் செயலாளர்களையோ நெருக்கடிக்கு ஆளாக்க வேண்டுமென்று அவர் எண்ணியிருந்தால் -- அதுதான் அவருடைய நோக்கமாக இருந்திருந்தால் -- நிச்சயமாகச் சொல்கிறேன் -- 'எம். ஜி. ஆர். அவ்வளவு புத்தி கெட்டவரல்லர்; திறமையற்றவரல்லர்' என்று!

அவர் அந்த அளவோடு விரும்பியிருந்தால், மாவட்டச் செயலாளர்கள் கணக்கில் சந்தேகம் இருக்கிறது; அந்தக் கணக்கு வேண்டும்' என்று, அல்லது 'அமைச்சர்களுடைய கணக்கில் சந்தேகமிருக்கிறது; அதை நடுநிலையாளர்கள் அடங்கிய குழு விசாரிக்க வேண்டும்' என்றோ சொல்லியிருப்பார்!

அவருடைய நோக்கம் அதுவல்ல; 'கழகத்திலிருந்து நாம் வெளியேறவேண்டும் அல்லது வெளியேற்றப்பட வேண்டும்' என்ற ஒரு முடிவிற்கு அவர் வந்துவிட்டார், அதனால்தான், 18 000 கிளைக் கழகச் செயலாளர்களுடைய விரோதத்திற்கு ஆளாக அவர் தயாராகி விட்டார்!

இந்த நிலைமைக்கெல்லாம் என்ன அர்த்தம் ?

அப்படி ஒரு நிலைமை ஏற்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார்; அப்படி ஏற்பட்டால்தான் கழகம் தன்னை வெளியேற்றும் அல்லது கழகத்தில் இருந்துகொண்டு நாம் கொண்டுவருகின்ற தீர்மானம் நிச்சயமாக நிறைவேறாது; எனவே, அதைக்கொண்டு வெளியேற முடியும் என்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டு அதனை அவர் எதிர்பார்த்தார்; அப்படியெல்லாம் இல்லாவிட்டால், அவர் வெளியேற்றப்பட்டார் என்றதும், 'மகிச்சியோடு இருந்தார் -- மிகுந்த குதூகலத்தோடு இருந்தார்' என்றெல்லாம் பத்திரிகையில் செய்தி வருகிறதென்றால் என்ன அர்த்தம் ?

ஒரு கட்சியிலிருந்து ஒருவர் வெளியேற்றப்பட்டார் என்ற செய்தி வந்ததும், 'திடுக்கிட்டார் -- திகைத்தார் -- அழுதார் -- புலம்பினார்' என்பதற்கு மாறாக, 'சிரித்தார் மகிழ்ந்தார் -- பாயசம் சாப்பிட்டார் -- பட்டப்பிடிப்பில் கலந்துகொண்டார்' என்றால், என்ன அர்த்தம் ?

வேண்டுமென்றே செய்யப்படுவதல்லவா ?

கிளைக் கழகச் செயலாளர்கள் -- வட்டச் செயலாளர்கள் கணக்குக் காட்ட வேண்டுமென்று எந்தக் கட்சியிலே இருக்கிறது? இந்த நடைமுறை எப்படிச் சாத்தியமாகும்? தூய்மை பேசுகின்ற கட்சியில் அல்லது அமைப்புரீதியில் நடைபெறுகின்ற எந்தக் கட்சியில் அப்படிக் கணக்குக் காட்டப்படுகிறது? திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மட்டும் -- பதினெட்டாயிரம் கிளைக் கழகப் பொறுப்பில் இருப்பவர்கள் கணக்குக் காட்ட வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தால் அதிலே நியாயம் இருக்கிறதா? ஆகவே, இது, வேண்டுமென்றே செய்யப்பட்ட காரியமாகும்; அவர் தொடர்ந்து இதே பிரசாரத்தைச் செய்வார்; அவருடைய ஆதரவாளர்கள் செய்வார்கள்.

கடந்த இரண்டு—மூன்று நாட்களாகக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பத்திரிகைகளிலும், காங்கிரசுப் பத்திரிகைகளிலும் எம்.ஜி ஆர். படங்களை எவ்வளவு எழில் வண்ணத்தோடு வெளியிடுகிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

எத்தனை நாளைக்கு இந்தப் பராக்கிரமம் ?

ஒவ்வொரு நாளும் சத்தியா ஸ்டுடியோவில் எம். ஜி. ஆர். பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்; காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் நடத்தியதுபோல், ஒவ்வொரு நாளும் அங்கே கூட்டம் கூடுவதும் -- அவர்களுக்கு இவர் அறிவுரைகள் வழங்குவதும் -- இது பத்திரிகைகளில் வருவதும் நாள்தோறும் வருகின்ற செய்திகளாக இருக்கின்றன; அது எத்தனை நாளைக்கு நடைபெறும் -- 10 நாளைக்கு நடைபெறலாம்; 10 நாளைக்கு அந்த பரபரப்பு இருக்கலாம்; ஆனால் எப்படியும் நம்முடைய கழகம் இரண்டு பட வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கின்ற மாற்றுக் கட்சிக்காரர்கள் இதைப் பயன்படுத்திக்கொண்டு பேசுகிறார்கள்.

தி. மு. கழகம் சிலிர்த்து எழுந்தால்...

நாவலர் அவர்கள், 'நாம் சிலிர்த்து எழுந்தால் -- ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான கூட்டம் போட்டு மக்களிடம் நம்முடைய கொள்கைகளை எடுத்துச் சொன்னால் நம்முடைய கருத்துக்களை எதிர்க்க யாராலும் முடியாது' என்று சொன்னார்; அதை நான் முழுக்க முழுக்க ஒப்புக் கொள்கிறேன்; அதே நேரத்தில், எம். ஜி. ஆர். மாத்திரம்தான் அங்கே இருக்கிறார் என்று யாரும் கருதாதீர்கள்; அவர் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகளைச் சொல்ல காங்கிரசுக் கட்சி இன்று கச்சை கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டது; இந்திரா காங்கிரசு இதைப் பயன்படுத்திக் கொள்ளும்; வேறு சில கட்சிகள் தொடர்ந்து இந்தக் காரியத்தைச் செய்யும்."

கடற்கரையில் கூடிய இலட்சோப இலட்சம் பேர்

—★—

கலைஞர் -- நாவலரை வாழ்த்தி விண்ணதிர முழக்கம்

பொதுக்குழு முடிவுகளை விளக்கித் தலைவர்கள் உரை

சென்னை, அக். 17--

தி மு.க. செயற்குழு--பொதுக்குழு முடிவுகளை விளக்குவதற்கென்று, சென்னை மாவட்ட தி.மு.க. உறுதுணையுடன் தலைமைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டம் 15-10-72 மாலை 7-மணியளவில் திருவல்லிக்கேணிக் கடற்கரைச் சீரணி அரங்கில் தொடங்கியது.

மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி அனைவரையும் வரவேற்று, நாவலர் அவர்களைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

கழகப் பொதுச்செயலாளர் நாவலர் அவர்களின் தலைமையுரைக்குப்பின், இராமநாதபுர மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி., பேராசிரியர் க. அன்பழகன், மதுரை மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி, துணைப் பொதுச்செயலாளர்கள் திரு. என். வி. நடராசன், திரு. க. இராசாராம், அமைச்சர்கள் திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாகக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

கூட்டத் துவக்கத்தில் சிவகங்கை சேதுராசன், இசைமுரசு நாகூர் அனீபா, சதாசிவம் ஆகியோர் இயக்கப் பாடல்கள் பாடினர்.

பொதுக்கூட்ட மேடை மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இலட்சோபலட்சம் மக்கள் குழுமியிருந்து தலைவர்களின் விளக்கங்களை அமைதியாகக் கேட்டனர்.

கூட்டத்துக்குக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களும் பொதுச்செயலாளர் நாவலர் அவர்களும் வந்தபோது, 'கழகத் தலைவர் கலைஞர் வாழ்க'—'அண்ணாவின் அருமைத் தம்பி நாவலர் வாழ்க'—'முறைப்படி வந்த முழுமைத் தலைமை வாழ்க' என முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன.

தலைமைக் கழக அறிவிப்பு

ஒழுங்கு நடவடிக்கை

சென்னை மாவட்ட தி. மு. க. பொதுக்குழு உறுப்பினரான தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி. அவர்கள், அண்மைக்காலமாகக் கழகக் சட்டுப்பாடு--ஒழுங்கு முறைகளுக்கு விரோதமாகவும், கழகத்தைக் குலைத்தும் -- கழகத் தோழர்களிடையே குழப்பம் விளைவிக்கும் வகையிலும் செயல்படுவதுடன், அதற்கு ஏற்பவே தன்னை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் 'தென்னகம்' நாளேட்டில் கழக விரோதமான செய்திகளையே உண்மைக்கு மாறாகவும், திரித்தும், அவதூறுபடுத்தியும் வெளியிட்டுச் செயல்படுவதால், தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இன்று முதல் கழகத்தின் சாதாரண உறுப்பினர் பொறுப்பு உட்பட கழகத்தின் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்டு) வைக்கப்படுகிறார்.

அவர்பேரில் விரைவில் முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

'அறிவகம்'
சென்னை-13
16-10-72

இரா நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி.மு.க.

தொண்டனே...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அவனுக்கு நாம் செலுத்துகின்ற மரியாதைதான் அண்ணாவின் கல்லறைக்கு நாம் செலுத்துகின்ற மரியாதையாகும்!

ஆகவே, யாரிடத்திலே மனக் கிலேசங்கள் இருந்தாலும்--மன மாச்சரியங்கள் இருந்தாலும் வேறுபட்டுச் செயல்பட முனையாதீர்!

அருமை நண்பர்களே -- கழகக் கண்மணிகளே--உங்களுடைய இரத்தத்தால் வளர்ந்தது இந்தக் கழகம்; உங்களுடைய தியாகத்தால் உயர்ந்தது கழகக் கொடி; உங்களால் இருப்பவர்கள் நாங்கள்; ஆகவே, நீங்கள் தான் கழகத்தின் ஜீவாதார நரம்புகள் -- இரத்த நாளங்கள்; நீங்கள் உங்களுக்குள் ஒற்றுமையாக இருங்கள்; நீங்கள் ஒன்றுபட்டிருந்தால்--வேற்றுமை இல்லாமல் நாம் இருப்போமேயானால் எவ்வளவு பெரிய சக்தியாக இருந்தாலும் - எவ்வளவு விளம்பரம் பெற்ற சக்தியானாலும்--எவ்வளவு வல்லமை பெற்ற சக்தியானாலும் -- முன்னேற்றக் கழகத்தை எதுவும் செய்ய முடியாது!

நம்முடைய கொள்கைகள் -- நம்முடைய இலட்சியங்கள்--நாம் அந்த இலட்சியத்திற்காக எடுக்க வேண்டிய முயற்சிகள் -- அவற்றிற்குப் பின்னால் நாம் அனைவரும் இருப்போம் என்று உறுதி ஏற்றுக்கொள்ளுங்கள்--சூளுரை மேற்கொள்ளுங்கள்!"

--- கழகத் தலைவர் கலைஞர்

(பொதுக்குழுக் கூட்டத்தில்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] சென்னை-1 [illegible] வெளியிடப்படுகிறது.